# SLITA

## இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்

**(கைத்தொழில்கள் அமைச்சு)**

# பதவி வெற்றிடம்

பயிற்சி, பரிசோதித்தல், தொழில்நுட்ப சேவைகள் மற்றும தொழில்நுட்ப செயற்றிட்டம் மற்றும் உசாத்துணை ஆகியவற்றை புடவை மற்றும் ஆடை கைத்தொழிலுக்கு வழங்கும் அரசாங்க நியதிச்சட்ட அமைப்பொன்றாக இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகமானது விளங்குவதுடன் தற்போது பின்வரும் பதவி வெற்றிடமானது காலியாகவுள்ளது.

**பணிப்பாளர் (செயற்பாடு)**
**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ மனித வள முகாமைத்துவம்/ சட்டம் அல்லது விஞ்ஞானத்தில் பெற்றவொரு இளமாணிப் பட்டம்.

அத்துடன்

உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப்பட்டம் (முதுமாணி).

மற்றும்

கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/நிறுவனம் அல்லது புகழ் வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருட அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. வெளியக விண்ணப்பதாரிகளுக்கு மேலேயுள்ளவாறு தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகத்தில் 1 ஆம் தரத்தில் முகாமையாளர் வகுதியிலுள்ள (எம்எம் 1-1) பதவியொன்றிற்கு உரித்தான துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 35 வயதிற்கு குறைவில்லாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ஏச்எம் 1-3-2016: 86,865 – 15x2,270- 120,915.

* அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நன்மைகளுமுண்டு.
* மேற்பட்ட தகைமைகள் சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

மேலேயுள்ளதில் உங்களுக்கு ஆர்வமிருந்தால், 2023 மார்ச் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் விபரமான குறிப்புடனும் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடனும் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டு உங்கள் விண்ணப்பத்தை அனுப்பவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும் (தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்களென்பதுடன் சபை ஆளுநர்களின் தீர்மானமே இறுதியானதாகும்)

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்,**
**இல. 02, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை.**
**தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 011 2636337. இணையம்: www.slita.lk**

isharaiz.com